# பணிநிறைவு வாழ்த்து!

## திரு. கோ.பா. உன்னிக்கிருஷ்ணன்,

### சுங்க இல்லம், சென்னை.

### நாள்: 31-12-2024



**கொ**ஞ்சுதமிழ் சீர்க் கோவை மண்பிறந்து,
செஞ்செவிய பணியின் முகம் சென்னையாக,
பஞ்சமில்லா உள்ளத்தைக் கரங்கோத்து,
வஞ்சிநகர் நினைவோடு சுங்கம்வந்து,

தகவல் உள்ளீட்டுப் பணியுமாகிச் சீர்த்,
தடம்பதித்து வேர்க்கால் பணியுமாகி,
முடமில்லாச் சிந்தையாலே முகிழ்ந்து,
வடம் கொண்டு தேரிழுக்கத் தமிழின்

கரம் தொட்டு  முணைந்து நிற்க,
சிரம்காக்கும் தோழமையாய் நாங்கள்,
சிந்தைகொண்டு இணைந்திடவே,
**சுங்கமுரசெ**ன்று பறைசாற்றி நின்று,

திங்களெலாம் தமிழும் தாம் மணக்க,
திகட்டாமல் பயணம் செய்தோம்!
பகட்டின்றி பத்தாண்டு பயணிக்க,
முகம் கொண்ட முன்னுரையின்றி,



தகதகக்கும் தமிழ்மணமும் இன்றி,
முகம் தேற்றி முடிவு செய்தோம்!
அகமெல்லாம் தமிழ் மணக்கும்,
அன்பின்சீர் **உன்னி** யவர்க்கு,

- வேறு—

சேரநாட்டின் நறுஞ்செந்தமிழே மொழியாம்!
ஆரமென மலைகொஞ்ச மலையாளம் ஆகி,
கேரளம் என்று நாட்டின் பெயரும் மாற்றம்!
சீராட்டும் தமிழே அவருள் சிறப்பாய் நிறையும்!

ஆன்ற பணிசெய்து அனைவருக்கும் நட்பாகி,
ஆணையரும் அடுத்து வரும் யாவருமே,
இணையாக அழைக்கும் இருவரில் ஒருவராகி,
பணிநிறைவைக் காண்கின்றார் இன்று!

பயணம்பெரிது பழகிய புலமும் பெரிது,
அயராது பணிசெய்தும் முகமில்லை அதற்கு!
துயரோடு துவளாது பணிசெய்த மூன்றாமர்!
தயங்காது இனிதொடரும் எதனைக் கொண்டு?

முயங்காமல் இம்மூவர் பணியைச் செப்பணிட,
முயலாமல் இருந்ததுவோ அரசின் பயணம்!
இயலாமை எனச்சொல்லி ஏதும் பயனில்லை!
இன்றிவரும் பணிநிறைவைக் கண்டாரன்றோ!

மூன்றாம் நிலைகாணும் வாழ்வின் தொடக்கம்!
ஆன்ற கல்வியின் அறிவுப் புலம் கொண்டு,
தோன்றும் அறிவைத் துணைக்கழைத்து;
ஆன்ற சிந்தனையால் செப்பம் செய்து நாளும்,

மாண்புடை காலமென மனத்தில் நிறைந்து,
மறுவின்றிப் பயணிக்க மனமார வாழ்த்துகிறோம்!
அறங்கொள் நாயகியாய் இல்லக் கிழத்தி,
அடுத்து அன்பான செல்வமகன் சீராளன்!

தொடுத்த வாழ்க்கையது துயரின்றி பயணிக்க,
அடுத்து உண்டான அனைத்தும் கொண்டு,
அகமகிழ்ந்து வாழ்வாங்கு வாழ்க வென்றே,
அன்பில் நிறைந்து நாங்கள் வாழ்த்துகின்றோம்!

அன்புடன்,

**- கு.ப. அசோகன்,**
**மு.ஜெயசங்கர், சு.இரவிச்சந்திரன்,**
**நா. கிரிபிரசாத்.**

